

www.nilafrance.com

# நிலா

இது ஓர் இலவச வெளியீடு
(மூவாயிரம் பிரதிகள்)

கார்த்திகை - மார்கழி 2011 | இது கிருஷ்ணா அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 12




Liberté • Égalité • Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE

# பிரெஞ்சுக் குடியுரிமை : இறுக்கமடையும் நடைமுறைகள்



பிரெஞ்சுக் குடியுரிமையைப் பெறுவதற்கு இனிவரும் காலங்களில் மேலும் இறுக்கமான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவுள்ளன. 12 ஒக்ரோபர் 2011 இல் வெளியிடப்பட்ட அரசு வர்த்தமானியில் (Journal officiel) இதற்கான அறிவித்தல்கள் வெளியாகியுள்ளன.

குடியுரிமையினைப் பெறுவதற்கான பிரெஞ்சு மொழி அறிவின் உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. தவிர நாட்டினது வரலாறு தொடர்பான அறிவினையும் விண்ணப்பதாரி கொண்டிருக்கவேண்டும் என்ற கடப்பாடு அடுத்த ஜனவரி முதல் நடைமுறைக்கு வருகிறது. இந்த நாட்டின் கலாச்சாரம் மற்றும் விழுமியங்களுடன் விண்ணப்பதாரி ஒத்திசையவேண்டும் என்பதும் கட்டாயமாகிறது. குடியுரிமையினைப் பெற்ற ஒருவர் பிரான்சில் இருந்தவாறே பிற நாடொன்றில் இரட்டைக் குடியுரிமையினைப் பெறுவதும் தடைசெய்யப்படுகிறது.

«உங்களை வரவேற்ற இந்த நாட்டினது வரலாறு, அதனது கோட்பாடுகள், கலாச்சாரம் மற்றும் விழுமியங்களை முழுமையாகப் பின்பற்றிச் செயற்படுவதற்கு விண்ணப்பதாரியான நீங்களும் உங்களது சந்ததியினரும் தயாராகவேண்டியது கட்டாயம். இந்த செயற்பாட்டின்போது, நாட்டினது சமூகத்தவர்களுடன் ஒத்திசைந்து அவர்களுடன் நீங்கள் ஒன்றிணைய வேண்டும். அத்துடன் நாட்டினது பாதுகாப்புக்கு பங்களிப்பேன் என உறுதியளிப்பதோடு நாட்டினது எதிர்காலத்தில் எனக்கும் பங்குண்டு எனச் செயலாற்றுவதும் முதன்மையானது. இதற்குப் பிரதி உபகாரமாக நீங்கள் இந்த நாட்டின் குடிமகன் என பிரான்ஸ் அங்கீகரிக்கும்» என "குடிமகன் ஒருவரின் உரிமைகளும் பொறுப்புக்களும்" என்ற புதிய சாசனம் விபரிக்கின்றது.

இனி வரும் நாட்களில் குறித்த ஒருவர் பிரெஞ்சுக் குடியுரிமையினைப் பெறவேண்டுமாயின் மேற்குறித்த இந்தச் சாசனத்தில் கையெழுத்திடுவதோடு, இதற்கான தேர்வு நேர்காணலிலும் தேர்ச்சிபெறவேண்டியது அவசியம். இந்த நேர்காணலின் அடிப்படையிலேயே குடியுரிமைக்கான விண்ணப்பம் தொடர்பான முடிவு எடுக்கப்படும்.

நாட்டினது நீதி மற்றும் சட்டவழமைத் திணைக்களத்திற்காக, குடிவரவுக்கான -




## கிருஷ்ணா அச்சகம்

தரம் - குறித்த தவணை - நியாயவிலை

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்,
மொழிபெயர்ப்பு தேவைகளுக்கும் நாடுங்கள்!

☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25
E-mail: krishnafrance@yahoo.com



73, Rue Doudeauville - 75018 PARIS (Métro : Château Rouge)

உயர்அவையினால் வரையப்பட்ட இந்தச் சாசனம் கடந்த யூன் 16 2011 அன்றும் அவையில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

குறித்த ஒருவர் இரட்டைக்குடியுரிமையினைப் பெறுவதை இல்லாதுசெய்யவேண்டும் என்பது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் நாட்டில் வலுப்பெற்றிருந்த நிலையில் பிரான்சில் இருந்தவாறே ஒருவர் பிற நாட்டில் இரட்டைக் குடியுரிமையினைப் பெறுவதை இந்தச் சாசனம் தடைசெய்கிறது. ஆனால் பிரான்சில் குறித்த ஒருவர் இரட்டைக் குடியுரிமையினைப் பெறுவதைச் சட்டரீதியாகத் தடைசெய்வது நடைமுறையில் சாத்தியமற்றதொன்று. ஏனெனில், குறித்த சில நாடுகள் தமது நாட்டுக் குடிமகன் ஒருவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தனக்கான குடியுரிமையினைக் கைவிடுவதை அனுமதிப்பதில்லை. உதாரணமாக மொறோக்கோவினை எடுத்துக்கொள்வோம். மொறோக்கோ நாட்டவர் ஒருவர் பிரான்சில் குடியுரிமையினைப் பெற்று வாழ்ந்தாலும் அவரையும் அவரது சந்ததியையும் தன் நாட்டின் குடிமக்களாகவே மொறோக்கோ தொடர்ந்தும் கருதும். இதுபோல ஒருவர் இரட்டைக் குடியுரிமையினைப் பெறுவதைச் சட்டரீதியில் தடைசெய்வது ஏனைய சில நாடுகளின் சட்டதிட்டங்களுடன் முரண்படக்கூடும் என்பதைப் பிரெஞ்சு உட்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் ஏற்றுக்கொண்டார். இருப்பினும் புதிதாகக் குடியுரிமையினைப் பெறும் ஒருவர் நாட்டின் அனைத்துச் சட்டதிட்டங்களுடனும் ஒன்றிப்போவதை உறுதிப்படுத்துவதுதான் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் சாசனத்தின் உண்மையான இலக்கு எனக் கூறினார்.

பிரெஞ்சுக்குடிமகன் ஒருவரின் சமூகவியல் உரிமைகள் என்ன என்பதை வழங்கும் வரையிலான புதிய சரத்துக்களும் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தச் சாசனத்தில் விரைவில் உள்ளடக்கப்படும் எனத் தெரிகிறது. ஊதியத்துடன் கூடிய மகப்பேறுகால விடுமுறை போன்ற அம்சங்களும் இதில் அடங்கும்.

இந்தச் சாசனத்தின் அடிப்படையில் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் ஒருவர் பிரான்சினது அடிப்படைக் கலாச்சார விழுமியங்களை நிராகரிப்பாரானால் அல்லது ஆண் - பெண் சமத்துவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பாரானால் அவரது குடியுரிமை வேண்டுகை நிராகரிக்கப்படலாம்.

கடந்த ஆண்டு 95,000 பேர் புதிதாகக் குடியுரிமையினைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் பலர் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாகப் பிரான்சில் வசிப்பவர்கள். பிரான்சில் பிறந்துவளர்ந்த பிள்ளைகளுக்காகவே பெற்றோர்கள் பலர் இந்த நாட்டினது குடியுரிமையினைப் பெறுகிறார்கள்.

பிரெஞ்சு மொழி சரிவர பேசமுடியாத 10 இலட்சம் மக்கள் பிரெஞ்சு குடியுரிமையுடன் பிரெஞ்சு மண்ணில் வாழ்கின்றார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. தற்போது பொலிஸ் ஆணையக அலுவலகங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பிரெஞ்சு மொழி அறிவு இனிமேல் அவர்களால் மதிப்பீடு செய்யப்படாது என்பது வர்த்தமானி வெளியீட்டின் முக்கிய அம்சமாகும்.

(NK)

## வைன் உற்பத்தியில் பிரான்ஸ் முன்னணி



உலகில் வைன் உற்பத்தி செய்கின்ற நாடுகளில் பிரான்சும் பல ஆண்டுகளாக முக்கிய நாடாக இருந்து வருகிறது. நடப்பாண்டில் பிரான்ஸ் தனது உற்பத்தியை 9 வீதத்தினால் அதிகரித்து வைன் உற்பத்தியில் முதலாவது நாடாகவுள்ளது.

நடப்பாண்டில் 49,6மில்லியன் ஹெக்ரோ லீற்றர் (Hectolitres) வைன் பிரான்சில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதற்கு அடுத்ததாக இத்தாலியும் (42 மில்லியன்), மூன்றாம் இடத்தில் ஸ்பெயின்(35மில்லியன்) நாடும் உள்ளது. இந்த ஆண்டில் இத்தாலி 13 வீதம் குறைவாகவும் ஸ்பெயின் 2வீதம் குறைவாகவும் உற்பத்தி செய்துள்ளன. ஒரு ஹெக்ரோலீற்றர் என்பது 100லீற்றர்களைக் கொண்ட அலகாகும். பிரான்சில் தனியொருவருக்கான சராசரி வைன் உற்பத்தி ஆண்டுக்கு 825லீற்றர் ஆகும்.

(YB)




ஹெல் வெற்றிக் கிறடி என்னும் சுவிஸ் வங்கி ஆண்டுதோறும் கோடீஸ்வரர்களை பட்டியலிடுகின்றது.
இதன்படி பிரான்சில் 26 இலட்சம் பேர் கோடீஸ்வரர்களாக உள்ளனர். இப் பட்டியலின்படி ஐரோப்பாவில் ஆகக்கூடுதலான மில்லியினர்களைக் கொண்ட நாடு பிரான்ஸ் தான்.

(YB)

◆ ரூபி அச்சகம் ◆





**உங்கள் மழலைகளின் வண்ண வண்ண போஸ்ரர்கள், மற்றும் உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய போஸ்ரர்களை பதிப்பித்துக்கொள்ள எம்மை நாடுங்கள் !**

**10, RUE LABAT- PARIS 18**
M°: Marcadet Poissonniers
Tél.: 01 42 51 80 78

# தாக்குதலிற்குள்ளாகும் ‘ரிக்கற்’ பரிசோதகர்கள்




வன்முறையானது பயணச்சீட்டு பரிசோதகர்களையும் விட்டுவைக்கவில்லை.


ரிக்கற் பரிசோதனையின்போது தாக்கப்படும் பரிசோதகர்களின் எண்ணிக்கை பிரான்சில் அதிகரித்து வருகின்றது. பரிசோதகர்களின் பாதுகாப்பு கருதி SNCF, TGV என்பன எதிர்காலத்தில் பயணச்சீட்டுக்களை புகையிரத மேடையிலேயே பரிசீலிக்கின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளன.

லியோன் - ஸ்ரார்ஸ் பேர்க் இடையேயான சேவையொன்றின் போதான தாக்குதலில் பரிசோதகர் ஒருவர் சுய நினைவை இழந்துள்ளார்.

இச்சம்பவத்தோடு குறித்த நிறுவனங்கள் பணியாளர்களின் பாதுகாப்பில் விரைந்து செயற்படத்தொடங்கியுள்ளன.

பாரிஸ் - றென் - பிறஸ்ற் (Paris - Rennes-Breast) புகையிரத வழித்தடத்தில் பரிசோதனை முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக தேவையேற்படும் பட்சத்தில் 100 பேர் வரையில் பொலிஸ் சேவையில் இணைக்கப்படவும் உள்ளனர்.

(YB)




2011 ஒகஸ்டில் பிரான்சின் வேலையற்றோர் தொகை அதிகரித்துள்ளதாக Pôle emploi நிறுவனம் தெரிவிக்கிறது. செப்ரெம்பர் மாத கணக்கெடுப்பின்படி வேலை தேடுவதற்காக பதிவுசெய்தவர்களின் எண்ணிக்கை 28 இலட்சத்தை அண்மித்துள்ளது. ஒரு வருடத்தில் இது 3 வீதம் அதிகரித்துள்ளதாக இந்நிறுவனம் மேலும் தெரிவிக்கின்றது.

செப்ரெம்பர் மாதத்தில் மாத்திரம் 26000 பேர் வேலை இழந்து இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளனர். அத்துடன் தவறான விபரங்களை கொடுத்து 1 மில்லியன் யூரோக்கள் வரை மோசடி செய்துள்ளதாக பிரான்சின் தென்மேற்கு பகுதியைச்சேர்ந்த கணவன், மனைவி இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து மோசடியில் ஈடுபட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

(YB)

***கோபமாய் இருக்கும் போது***
***எந்தவிதமான முடிவையும் எடுக்காதீர்கள்..***
***சந்தோசமாய் இருக்கும் போது***
***எந்தவிதமான சத்தியத்தையும் கொடுக்காதீர்கள்..***



# விரிவடையும் பாரிசின் தெருத் தொடருந்து வலையமைப்பு Tram

பாரிசின் தெருத் தொடருந்து (Tram) வலையமைப்பினை Ile-de-France பகுதிக்கும் விஸ்தரிப்பதற்கான முன்னெடுப்புகள் தற்போது முனைப்புப் பெற்றிருக்கின்றன.

பாரிஸ் தெருத் தொடருந்து வலையமைப்பினைப் பொறுத்தவரையில் நான்கு மார்க்கங்களில் புதிதாகச் சேவையினை வழங்குவதற்கான கட்டுமானப்பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதோடு ஏலவேயிருக்கும் குறித்த மூன்று மார்க்கங்களில் விஸ்தரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறிருக்க 378 மில்லியன் யூரோ செலவில் 107 புதிய தெருத்தொடருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாக நகர போக்குவரத்து ஆணையகம் (STIF) அறிவித்திருக்கிறது. Saint-Denis (93) மற்றும் Garges-lès-Gonesse (95) ஆகிய பிரதேசங்களுக் - கிடையில் அமைக்கப்பட்டுவரும் T5 எனப் பெயரிடப்பட்ட புதிய தெருத் தொடருந்து மார்க்கத்தில் இந்தப் புதிய தொடருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும். குறித்த இந்தப் புதிய தொடருந்துப் பாதைக் கட்டுமானம் அடுத்த ஆண்டினது முதற்பகுதியில் நிறைவடையும்.

Porte de Versailles (15ème) மற்றும் La Defence பகுதிகளுக்கிடையிலான T2 மார்க்கம் உள்ளிட்ட நான்கு முதன்மையான மார்க்கங்களில் தற்போது தெருத்தொடருந்து சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

பாரிசிலுள்ள 71 தொடருந்து நிலையங்களிலிருந்து தினமும் 370,000 பயணிகள் நகரின் தெருத் தொடருந்து வலையமைப்பினைப் பயன்படுத்துகிறார்கள். தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்ததும் தெருத்தொடருந்து நிலையங்களின் எண்ணிக்கை 116 ஆகவும் தினமும் இந்த சேவையினைப் பயன்படுத்துபவர்களது தொகை 830,500 ஆகவும் அதிகரிக்கும் என நகர போக்குவரத்து ஆணையகம் கூறுகிறது.

(NK)

# இன்ரநெற் :

## குழந்தைகள் பாதுகாப்பும் பெற்றோரின் பங்கும்...



உலகில் இணையத்தின் பாவனை மேலும் மேலும் முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருக்கும் போது குழந்தைகள் மத்தியில் அவை எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. குழந்தைகள் நாளாந்தம் சராசரியாக ஒன்றரை மணிநேரம் தங்கள் கணனிக்கு முன்னால் இருக்கின்றனர்.

11 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகளுள் மூன்றில் ஒரு பங்கினர் நண்பர்களை ஒதுக்குதல், போதிய நித்திரையின்மை, பாடசாலை கல்வியில் கவனமின்மை போன்ற பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் 9-16 வயதில் உள்ள குழந்தைகளில் பத்தில் ஒருவர் தெரியாதவர்களுடன் இணையம் மூலம் தொடர்புகளை ஏற்படுத்துகின்றார்.

இவ் வயதில் உள்ளவர்களுள் 15 வீதமான குழந்தைகள் இணைய பாவனையின் மூலம் பாலியல் (Sexuelles) போட்டோக்களை பார்ப்பதன் மூலம் பாதிப்படைகின்றனர் என்று 2010 ஐரோப்பிய குழந்தைகள் ஆய்வு (Enquête Eu Kids 2010) தெரிவிக்கின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி குழந்தைகளின் ஒரு பகுதியினரை மோசமான பாதிப்புக்குள்ளாக்குவதாக இவ்வறிக்கை தெரிவிக்கின்றது. இதற்காக சில ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

**முதலாவதாக,** குழந்தைகள் பாவிக்கின்ற கணனியை பெற்றோர் தொடர்ந்து தங்கள் கணனிமூலம் கண்காணிப் பதற்கு ஏதுவாக சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு தற்போது வசதிகள் உள்ளன. பெற்றோர்கள் இவ்வசதியைப் பயன்படுத்துவது அவசியம் என்று அறிவுறுத்துகிறது.

**இரண்டாவதாக,** குழந்தை களின் தனிஅறையில் கணனிகளை வைக்காமல் இருத்தல் சிறந்த முடிவு எனவும் தெரிவிக்கின்றது.

**மூன்றாவதாக,** குழந்தைகளின் கணனி பாவனை நேரத்தை சரியான முறையில் திட்டமிடுவதுடன் அதை சரியான முறையில் கடைப்பிடிப்பதுமாகும்.

**நான்காவதாக,** இணையத்தில் குழந்தைகள், நண்பர்கள் வட்டத்தை பெரிதாக்கிக் கொண்டு குழுக்கள் (Bande de Copains) கோஸ்டிகள் அமைவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படாதவண்ணம் கண்காணித்தல்.

**ஐந்தாவதாக,** தற்போது இணையம் வாழ்வின் உண்மையான பிரதி பலிப்பல்ல என்பதை புரிந்துகொள்ள பெற்றோர் குழந்தைகளுக்கு உதவுதல்.

அத்துடன் தங்கள் பெயர், விபரங்களை எல்லோருடனும் அவசியமில்லாத வேளைகளில் பகிர்ந்து கொள்ளாதிருத்தல் அவசியம் என்றும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

குழந்தைகள் இணையத்தின் வலைக்குள் விழாமல் 16-18 வயது வரையாவது பாதுகாப் பதில் பெற்றோரின் பங்கு மிக மிக முக்கியமானதாகும் என தெரிவிக்கப்படுகின்றது.


வளர்ச்சி அடைந்த ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலேயே நிலைமைகள் கட்டுமீறிப் போகின்ற சூழ்நிலையில், ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் இதன் தாக்கம் பல மடங்கு கூடியதாக இருக்கவே வாய்ப்புள்ளது .

(YB)

## ● பிரெஞ்சு நாட்டுத்தலைவர் தேர்தல் 2012

எதிர்வரும் 2012 இல் நடைபெற இருக்கும் நாட்டுத்தலைவர் தேர்தலில் வலது, இடதுசாரிக் கொள்கைகள் சார்புடைய பத்துக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் குதிக்க இருக்கின்றனர். தேர்தல் பிரச்சாரத்தில் மறை முகமாக ஈடுபட்டிருக்கும் வேட்பாளர்கள் பெறவிருக்கும் கருத்துக் கணிப்புக்கள் ஊடகங்களில் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. இதுவரைக்கும் வெளியான அந்தக் கணிப்புக்களின் படி, நடந்துமுடிந்த பல தேர்தல்களின் முடிவுகளில் வெற்றிபெற்ற கட்சியான PS - சோஷலிஸக் கட்சி வேட்பாளரான François Hollande க்கே வெற்றிவாய்ப்பு இருப்பதாகப் பேசப்படுகிறது. இவரை அடுத்து இரண்டாம் இடத்தில் UMP வேட்பாளராகக் கருதப்படும் தற்போதைய ஜனாதிபதி Nicolas Sarkozy உம், மூன்றாம் இடத்தில் FN - தீவிர வலதுசாரி வேட்பாளரும் அக்கட்சியின் தலைவியுமான Marine le Pen உம் இடம்பிடித்திருக்கிறார்கள்.

இரண்டு சுற்றுக்களாக இடம்பெறும் இத்தேர்தலில், இரண்டாவது சுற்றில் இரு வேட்பாளர்களே நிற்பார்கள். இந்த இருவரில் அதிக வாக்குகளைப் பெறுபவர் நாட்டுத் தலைவராக - ஜனாதிபதியாக ஆவார்.





இதுவரைகாலமும் ஐந்தாம் குடியரசில் நடந்து முடிந்த எட்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும், நடப்பு ஜனாதிபதியாக இருந்த வேட்பாளர் வெற்றிபெறமாட்டார் என முன்னபிப்பிராயக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்தது கிடையாது என சொல்லப்படுகிறது. ஆனால் 2012 தேர்தலில் நடப்பு ஜனாதிபதி வெல்லுவார் என ஊடகங்களோ, கருத்துக்கணிப்புக்களோ இன்னும் சூசகம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்.எஸ்)

## NANTES :

### விமான நிலையம் எங்களுக்கு வேண்டாம்!

Nantes எனும் இடத்தில் வரப்போகும் விமானநிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பாரிஸ் நகரில் மக்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். Notre-Dame-des-Landes எனும் பெயரோடு Nantes பகுதியில் 2017 இல் திறக்க திட்டமிடப்பட்டிருக்கும் விமான நிலையத்தினால் அருகில் உள்ள விவசாயிகள் பாதிப்படைவர் என்றும் இந்த விமான நிலையம் அத்தியாவசியமற்றது என்றும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

- அஜி




பிரெஞ்சுக்காரர்களின் வாழ்வில் பின்னிப்பிணைந்ததொரு அம்சமாக செல்லப்பிராணிகள் விளங்குகின்றன. இன்றைய நிலையில் பிரான்சில் பல்வேறுபட்ட 60 மில்லியன் செல்லப் பிராணிகள் வளர்க்கப்படுகின்றன. அண்மையில் இணையத்தளமொன்று நடாத்திய கருத்துக்கணிப்பின் பிரகாரம் செல்லப்பிராணிகள்தான் தங்களது வாழ்வின் முதன்மையான அம்சமென பிரெஞ்சுக்காரர்கள் பலரும் கருதுகிறார்கள்.

தங்களது கூட்டாளிகள் யாராக இருந்தாலும், அது நாயாகவோ, பூனையாகவோ, பறவைகளாகவோ, ஊர்வனவாகவோ ஏன் இதர விலங்குகளாகவோ இருக்கலாம், அவர்கள்தான் தங்களுக்கு மகிழ்வைத் தருவதாக கருத்துக்கணிப்பில் பங்கெடுத்த 95 வீதமான பிரெஞ்சு ஆசிரியர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அதிக விசுவாசம்மிக்க நண்பன் தம் செல்லப்பிராணிகள்தான் என கருத்துக்கணிப்பில் பங்கெடுத்த 56 சதவீதமான வீட்டு உரிமையாளர்கள் கருதுகிறார்கள். தம் வாழ்வின் உண்மையான துணை இவைகள்தான் என மூன்றில் ஒரு பகுதி ஆசிரியர்கள் கூறுகிறார்கள். நாய்களைச் செல்லப்பிராணிகளாக வளர்க்கும் பிரெஞ்சுக்காரர்களில் 17.5 சதவீதமானவர்கள் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நாய்களை வளர்க்கிறார்கள். அதேபோல பூனைகளை வளர்ப்போரில் 32 சதவீதமானவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பூனைகளை வளர்க்கிறார்கள்.

நாட்டில் செல்லப்பிராணிகளை வைத்திருப்பவர்களில் அரைப்பங்கிற்கும் அதிகமானவர்கள் 500 யூரோ கொடுத்து செல்லப்பிராணிகளை வாங்கவும் தயாராகவே இருக்கிறார்கள். 25 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் அதற்கும் மேற்பட்ட தொகையினைச் செலவிடும் நிலையில் உள்ளார்கள்.

நவம்பர் 10 தொடக்கம் 19 வரையான நாட்களில் பாரிசில் செல்லப் பிராணிகளுக்கான கண்காட்சி ஒன்றும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

(NK)

> **நீங்கள் ஒரு விடயத்தை எவ்வளவு தூரம்**
> **உறுதியாக நம்புகிறீர்களோ**
> **அவ்வளவுக்கு அது செயல் வடிவம் பெறுகிறது**

---



## பிரான்ஸ் – லண்டன்
### TGV - EUROSTAR

TGV - EUROSTAR இன் பயண சேவையானது பாரிசிற்கும் இலண்டனிற் குமிடையே ஆரம்பிக்கப்பட்டு 17 வருடங்கள் ஆகின்றன. இச் சேவை ஆரம்பத்தில் Paris இன் Gare du Nord இல் இருந்து ஆரம்பித்து London - Waterloo என்ற இடத்தை சென்றடைந்தது. இப் பயண சேவை 1994ம் ஆண்டு நவம்பர் 14 இல் காலை 8.07 மணிக்கு வெள்ளோட்டமாக ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வெள்ளோட்டம் 794 பயணிகளுடன் 300km/h வேகத்தில் 3 மணித்தியாலத்தில் London தலைநகரைச் சென்றடைந்தது. சுரங்கத்தில் இதன் வேகம் மணிக்கு 160km/h ஆகவுள்ளது. 2007ம் ஆண்டின் பின்னர் பயணமானது எளிதான வகையிலும் மிக வேகமானதாகவும் ஆக்கப்பட்டுள்ளது. தற்போது பயண நேரமானது 2.15 மணித்தியாலமாக குறைக்கப்பட்டுள்ளது.

- தகவல் : கண்ணன்




அடுத்த வருடம் பிரான்ஸ் நாட்டின் கடன் தொகை 1800 மில்லியாட் யூரோக்களாக இருக்கும் என்று பிரான்சின் பிரதமர் பிரான்சுவா பியோன் (François Fillon) தெரிவித்துள்ளார். அதாவது கடன் ஒரு லட்சத்து எண்பதினாயிரம் (180000) கோடி யூரோக்களாகும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பிரான்ஸ் 4வது கடன் தொகை கூடிய நாடாக இருக்கப்போகின்றது.

## துயர் பகிர்வு



தோற்றம்: 07.05.1926
மறைவு: 14.09.2011
அமரர் இரத்தினசபாபதி மகேஸ்வரி



தோற்றம்: 04.10.1929
மறைவு: 14.09.2011
அமரர் வல்லிபுரம் கந்தையா



தோற்றம்: 26.07.1946
மறைவு: 17.09.2011
அமரர் கந்தையா மகாலிங்கம்



தோற்றம்: 30.08.1949
மறைவு: 08.10.2011
அமரர் குமாரராசா கெலன்மேரிதிரேசா



தோற்றம்: 21.06.1931
மறைவு: 18.10.2011
அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி



தோற்றம்: 22.04.1939
மறைவு: 23.10.2011
அமரர் பண்டாரம் இரத்தினம்



தோற்றம்: 27.06.1930
மறைவு: 12.11.2011
அமரர் இரத்தினசபாபதி சிவயோகலட்சுமி



தோற்றம்: 13.04.1932
மறைவு: 27.11.2011
அமரர் சின்னத்துரை கற்பகம்





# மின்தூக்கி விபத்தில் ஒருவர் பலி மூவர் படுகாயம்

பாரிசில் மின்தூக்கி (Lift) விபத்திற்குள்ளாவது மிகவும் குறைவு. ஆனால் கடந்த இரண்டு மாதங்களுள் பாரிஸ் 11 இல் மாத்திரம் இரு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. 24 நவம்பர் 2011 அன்று பாரிஸ் 11இல் மின்தூக்கி ஒன்று விபத்திற்குள்ளாகியதில் அதில் வேலை செய்துகொண்டிருந்தவர்களுள் ஒருவர் பலியாகியதுடன் மூவர் காயமடைந்திருந்தனர். மூவரில் ஒருவர் கோமா நிலையில் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர்.

மின்தூக்கியின் வடம் அறுந்தே இவ்விபத்து நிகழ்ந்ததெனினும் சரியான காரணங்கள் இன்னும் அறியப்படவில்லை.

ஏற்கனவே பாரிஸ் 11 இல் அமைந்துள்ள HLM கட்டடம் ஒன்றின் மின்தூக்கி 6வது மாடியில் இருந்து, 27 ஒக்ரோபர் 2011 அன்று வேகமாக கீழே வந்து போனதில் அதில் அகப்பட்டிருந்த 40 வயது தாயும் அவரின் இரண்டு குழந்தைகளும் விபத்திற்குள்ளாகியிருந்தனர் என்பதும் கவனத்திற்குரியதே. (YB)



# பிரான்சின் முன்னாள் முதற்பெண்மணி காலமானார்

பிரான்சின் மரியாதைக்குரிய ஜனாதிபதியாக விளங்கிய அதிபர் மித்ரோனின் மனைவி டானியல் மித்ரோன் அவர்கள் 22.11.2011 அன்று தனது 87வது வயதில் காலமானார்.

1944ல் மித்ரோனை மணம்முடித்த இவர் 51 ஆண்டுகள் இணைபிரியாது இல்லறவாழ்வை நடாத்தியதோடு அவரது அரசியல் வாழ்விலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தினார்.

பிரான்சின் முதற்பெண்மணியாக இருந்தபோதே பிரெஞ்சு அரசு நல்லுறவு பேண விரும்பிய நாடுகளில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்களை தயங்காது சுட்டிக்காட்டியவர்.

அதே காலப்பகுதியில் (1986ல்) France Libertés Foundation என்னும் அமைப்பை உருவாக்கியவர்.

மனித உரிமைகளிற்காக குரல்கொடுத்தமைக்காக ஐரோப்பிய கவுன்சிலால் வருடாந்தம் வழங்கப்படும் சிறப்புப்பரிசினை 1996ல் இவர் பெற்றுக்கொண்டார். (PK)

# Justin Bieber

**ஜஸ்டின் பீபர்** (வயது 17) ஒரு கனேடிய ஆங்கில பாடகர், கவிஞர் மற்றும் நடிகராவார். 'One time', 'My world' எனும் பாடல்கள் மூலம் புகழ்பெற்ற பீபர் 2010ம் ஆண்டின் அமெரிக்க இசை விருதை தனதாக்கினார். 'One time' பாடல் 2009 இல் கனடாவின் முதல் 10 பாடல்களுள் இடம்பெற்றதுடன் சர்வதேச பாடல் சந்தைகளிலும் முதல் 30 இடங்களிற்குள் இடம்பெற்றது. 'My world, My world 2,0' அமெரிக்காவில் வசூல் சாதனை புரிந்ததுடன் பிளாட்டினம் சான்றிதழும் பெற்றுக்கொண்டது. இவரது 'baby' எனும் வீடியோ பாடல் 'youtube' இல் அதிக மக்களால் பார்க்கப்பட்டதன் ஊடாக உலக சாதனை படைத்துள்ளது. இன்று, இளவயதினரின் கனவுநாயகன் பீபர். (PK)



# பாரிசில் தமிழர் நிகழ்வுகள்

- ***பரதநாட்டிய அரங்கேற்றம்***

செல்வி. சாலினி அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 22.10.2011 Garges les Gonesse இல் நடைபெற்றது.

- ***இராகமாலிகா***

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இராகமாலிகா இராகசங்கமம் - 2011 09.10.2011 அன்று பாரிசில் நடைபெற்றது.

- ***கலைவண்ணம் - 2011***

திருமறைக் கலாமன்றத்தின் கலைவண்ணம்-2011, 23.10.2011அன்று Fort d'Aubervilliers இல் நடைபெற்றது.

- ***நூல் வெளியீட்டு விழா***

கலைஞர் ரி. தயாநிதியின் ரணங்கள் நூல் வெளியீட்டு விழா 30.10.2011 அன்று பாரிசில் நடைபெற்றது.

- ***பரதநாட்டிய அரங்கேற்றம்***

செல்வி. மீரா அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 12.11.2011 அன்று Cergy இல் நடைபெற்றது.

- ***ASCES இன் 21 ஆவது ஆண்டு விழா***

ASCES இன் 21 ஆவது ஆண்டு விழா 06.11.2011 அன்று Espace Reuilly - Paris இல் நடைபெற்றது.

- ***கலை மாலை***

கவின் கலையகத்தின் கலைமாலை 29.10.2011 அன்று Le Bourget இல் நடைபெற்றது.

- ***கம்பன் விழா***

கம்பன் கழகத்தின் 10 ஆம் ஆண்டு கம்பன் விழா 12.11.2011 - 13.11.2011 ஆகிய தினங்களில் Sarcelles இல் நடைபெற்றது.

- ***மாவீரர் நாள்***

27.11.2011 அன்று லாக்கூர்னெவ் ஸ்தான் மைதானத்திலும், Le Bourget அரங்கிலும் மாவீரர் நினைவினைத்தாங்கி மாவீரர் நாள் கொண்டாடப்பட்டது.


மண்டபம் தேடி...

நீங்களும் அலைகிறீர்களா?

பாரிஸ் மற்றும் பாரிஸை சுற்றி

அமைந்துள்ள

1000 மண்டபங்கள்

கொண்ட இணைய முகவரி

இதோ உங்களுக்காக..

http://www.1001salles.com

(PR)



# பாரிஸ் தெருவில் பிறந்த குழந்தை

1 நவம்பர் 2011 இல் நண்பகல் 1மணிக்கு பாரிஸ் 14, Rue de L'Observatoire இல் உள்ள வீதியொன்றில் 39 வயது பெண்மணி ஒருவர் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ளார். அரச வைத்தியசாலைக்கு மிக அண்மையாகவே குழந்தை பிறந்துள்ளது.

குழந்தை இறந்து பிறந்துள்ளதாக தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தையின் பெற்றோர் வீடு இல்லாமல் வாழ்ந்தவர்கள் என்றும் பெற்றோர் அரச நிர்வாகத்தினருடன் தொடர்புகொண்டு வீடு ஒன்றைப் பெற முயற்சி செய்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. ஆனால், அலுவலகங்களில் 115ம் இலக்க தொலைபேசியை தொடர்புகொள்ளும்படியும் வேறு அலுவலகங்களைத் தொடர்புகொள்ளும்படியும் அவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

Médicin du Monde அமைப்பின் தலைவர் ஒலிவியே பேர்னார்ட்(Olivier Bernard) பல கர்ப்பிணிப் பெண்கள் தெருவீதிகளில் வாழ்வதாகவும் அவர்களின் நலன்கள் கவனிக்கப்படவேண்டும் என தான் 15 நாட்களின் முன் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார். இவ்வாறான சம்பவம் ஒன்று பாரிசில் வீதியில் நடந்தமை இதுவே முதலாவது முறை என நலன்புரிச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

பாரிஸ் நகரபிதா பேர்தரண்(Bertrand) இந்த நிலைமை ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும், சென்ற கோடைகாலத்தில் இருந்து SAMU என்ற பொது ஸ்தாபனத்திற்கு கடன் வழங்குவதை நிறுத்திய அரசே இச்சம்பவத்திற்கு பொறுப்புக் கூறவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

(YB)



# குப்பையைக் கிளறினால் குற்றம்!

பாரிசிலும் பஞ்சமா? என உங்களில் சிலர் புருவங்களை உயர்த்தலாம். ஆனாலும் பாரிசின் குப்பைவாளிகள் பல்வேறு சோகக்கதைகளை சொல்லத்தான் செய்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, 94ம் மாவட்டத்தில் உள்ள நுஅஜன் - சூர் - மார்ன் (Nogent-sur-Marne) என்ற இடத்தில் குப்பையைக் கிளறி பொருட்களை எடுப்பதற்கு தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. UMP கட்சியைச் சேர்ந்த நகர பிதா இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். அபராதமாக 38 யூரோக்கள் விதிக்கப்பட்டுள்ளன. "வறுமைப்பட்டவர்களை துரத்துவதற்கான நடவடிக்கைகள்" என எதிர்கட்சியினர் பிரேரணையின் போது குற்றஞ்சாட்டியுள்ளனர். உலகின் வல்லரசான பிரான்ஸ் நாட்டிலும் பல்வேறு பிரச்சனைகள் வளர்ந்து வருவதையே இவை பிரதிபலிக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. (YB)



# சாரதி இல்லாத மெற்றோக்கள்!

பாரிசில் நிலத்திற்கு கீழ் இயங்கும் 14 மெற்றோ (Métro) தடங்கள் உள்ளன. மெற்றோ தடம் ஒன்று பாரிசில் கிழக்கு மேற்காகவும் தடம் இரண்டு பாரிசின் வடக்கு தெற்காகவும் செல்கின்றது. ஆரம்பத்தில் மெற்றோ தடங்கள் பாரிசின் செல்வச் செழிப்பு மிக்க பகுதியான பாரிஸ் 16 இனை அண்டிய பகுதிகளிலேயே ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் மற்றப் பகுதிகளுக்கும் இச்சேவை விரிவாக்கம் செய்யப்பட்டது. பாரிசில் இறுதியாக ஆரம்பிக்கப்பட்ட தடமான 14வது இலக்கம் அதி நவீன தொழில்நுட்பத்துடன் சாரதி இல்லாமல் தானியங்கி (Automatic) முறையில் இயங்குகின்றது.

தற்போது தடம் 1 மெற்றோவும் (La Defense - Vincennes) தானியங்கி (Automatic) முறையில் இயங்க உள்ளது. முதலாவது தடத்தில் ஓடிய பழைய வண்டிகள் நான்காவது தடத்தில் தற்போது ஓடுகின்றன. வழமையாக சாரதி இருக்கும் இடத்தில் பயணிகள் இருக்கைகள் பொருத்தப்பட்டு வண்டி முன்னோக்கிச் செல்வதை பெரிய கண்ணாடி யன்னல் ஊடாக பார்க்கக் கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது நான்கு வண்டிகள் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 2012 ம் ஆண்டின் இறுதிக்குள் மொத்தமாக 49 வண்டிகள் சேவையில் விடப்பட்டு 1வது தடம் முழுமையாக தானியங்கி முறையில் இயங்கும். அப்போது இரண்டு வண்டிகளுக்கு இடையிலான நேரம் 85 செக்கன்களுக்கும் 105 செக்கன்களுக்கும் இடையில் இருக்கும். வண்டிகள் தானியங்கி முறையில் இயங்கும் போது மனித தவறுகள் இல்லாதபடியால் இரண்டு வண்டிகளிற்கு இடையில் உள்ள நேரத்தை இரண்டு நிமிடங்களுக்கும் குறைவாக இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக RATP இன் இயக்குனர் நாயகம் திரு பியர் மொங்கன் (Pierre Mongin) தெரிவித்துள்ளார். இத்தடம் வழியாக நாளாந்தம் 725 000 பேர் பயணிக்கின்றனர். அடுத்த மாதங்களில் தானியங்கி வண்டிகளின் தொகை படிப்படியாக அதிகரிக்கப்பட உள்ளது. தடம் 1 இல் பாவிக்கப்படுகின்ற தொழில் நுட்பம் எதிர்காலத்தில் மற்றைய மெற்றோ தடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வாய்ப்புள்ளதாக மெற்றோ போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் (YB) ●

# அட, பொலிசிடமே திருட்டா?

பொலிஸ் அலுவலரான Michel Gaudin ஒக்ரோபர் 12 லியோனிற்கு செல்வதற்காக ரெயில்வே ஸ்ரேசனில் காத்திருந்த சமயம் அவருடைய கைத்தொலைபேசியை பறிகொடுத்திருக்கிறார். தாங்கள் மனு ஒன்றை சமர்ப்பிக்க போவதாக கூறி அவருடன் சம்பாசனையை தொடுத்த நபர்களே கைத்தொலைபேசியை கையாடியிருக்கிறார்கள். எனினும் அந்த போனில் முக்கியமான எந்த தகவல்களும் சேமிக்கப்பட்டிருக்க -வில்லை என்கின்றது பொலிஸ் வட்டாரம்.



(PK)

# வழிப்பறி

சின்னட்டிக்கதை



அவன் ஓடிவந்த வேகத்தில் மெத்ரோவண்டியுள் நுழையவும் கதவு மூடிக்கொள்ளவும் சரியாக இருந்தது. அவனுக்கு மெதுவாக மூச்சிரைத்தது. கறுத்த பெரிய உருவம். ஓரளவு ஒழுங்காக்கப்பட்ட உடை. ஆனாலும் திருட்டு முழிகள். மெதுவாக தண்ணி அடித்தவன்போலவும் இருந்தான்.

நானும் எதிரே இருந்த நண்பனும் மெல்லிய மிரட்சியோடு அவனைப்பார்த்தோம். அதிகளவு ஆட்கள் இல்லாத அந்த வண்டியினுள் எங்களுக்கு சமாந்தரமாக இருந்த நான்குஇருக்கைகள் ஒன்றில் அவன் அமர்ந்துகொண்டான்.

அவனது யக்கற் பொக்கற்றுகள் விம்மிப் புடைத்துக்கொண்டிருந்தன. ஒவ்வொரு பொக்கற்றினுள்ளும் கையை விட்டு பொத்தி எடுத்து சில்லறைகளை தனக்கு முன் இருக்கையில் பரப்பிவைத்தான். போதாதற்கு ரவுசர் பொக்கற்றிலிமிருந்து எடுத்து பரப்பிவைத்துக்கொண்டு எண்ணத்தொடங்கினான். அவன் எங்களையோ அல்லது எவரையுமோ சட்டை பண்ணியதாய் இல்லை. முழுவதும் சில்லறைகள். 2 யூரோ, ஒரு யூரோ, ஐம்பது சென்ரிம், இருபது சென்ரிம் என ஒழுங்காய்ப்பிரித்து எண்ணிக்கொண்டிருந்தான்.

நானும் நண்பனும் ஆளையாள் பார்த்துக்கொண்டோம். 'எங்கையோ அடிச்சிட்டான்டா ' என்றான் நண்பன். எனக்கும் அப்படித்தான் பட்டது. ஆனால் நான் பயத்தில் ஒன்றும் கதைக்கவில்லை. ஓம் என்பது போல தலையசைத்தேன். தலை அசைக்கும்போதும் அவன் என்னைப்பார்க்கிறானா என்றும் வடிவாகஅவதானித்துக்கொண்டேன்.

'களவு, கொள்ளை, வழிப்பறி.. அட.. சீ இந்த நாட்டிலும் நிம்மதியாக இருக்கமுடியவில்லை' எனது நண்பன், இதை பிரெஞ்சு மொழியில் அவனுக்கு கேட்கும்படியாகவே பொரிந்து தள்ளினான். நான் எங்கையாவது எழுந்து ஓடலாமோவென்று அந்தரித்தேன். என்னுடைய நண்பன் ஒரு நியாயவாதிதான். முற்கோபக்காரனும் கூட. அநீதிகளைக்கண்டால் அந்த இடத்திலேயே கொதித்தெழுந்துவிடுவான். எல்லாம் சரிதான். ஆனால் அடிவாங்கமட்டும் நான் தயாராய் இல்லை.

'சரி, சரி நீ கொஞ்சம் பேசாமல் இரு....' என்று மெல்லிய குரலில், நான் கெஞ்சி முடிப்பதற்கிடையில் எழுந்து அவனின் சேர்ட் கொலரைப் பிடித்துவிட்டான். 'இதன்னடா வில்லங்கம்?' நான் ஓடவும் முடியாமல், விலக்குத்தீர்க்கவும் முடியாமல் தவித்துக்கொண்டிருந்தேன்.

'நீ கள்ளன், எங்க உதை அடிச்சனி சொல்லு சொல்லு' என்று கோபாவேசமாய் அவனை உலுப்பிக்கொண்டிருந்தான். அதோடு நின்றானா? அந்தப்பெட்டியில் துூர இருந்தவர்களையும் கத்திக்கூப்பிட்டுச் சன்னதமாடிக்கொண்டிருந்தான். ' உவனை விடேலாது. பொலிசில பிடிச்சுக்குடுக்கவேணும். அப்பதான் திருந்துவாங்கள்' என்று அடிக்க கையோங்க, எதிர்பாராதவிதமாக நான் பாய்ந்து அவனைத் தடுத்துக்கொண்டேன். அந்தக் கறுத்த உருவம் நினைத்திருந்தால் எங்கள்இரண்டுபேரையும் போட்டுத்துவம்சம் செய்திருக்கமுடியும். ஏதோ எங்களின் நல்லகாலம் தப்பித்துக்கொண்டோம். ஆனால், மிரண்டு போயிருந்த அவன் கண்களிலிருந்து நீர் கசிந்தது. அவன் உண்மையிலேயே பயந்துபோயிருந்தான். அந்த ஸீரோ டிகிரிக்குள்ளும் அவனுக்கு வியர்த்தது.

ஆனாலும் என்னுடைய சத்தியவந்தன் விடவில்லை. அவனை உருட்டிக்கொண்டிருந்தான். எங்கை எடுத்தனி உந்தக்காசு? சொல்லு சொல்லு என்று உறுமிக்கொண்டிருந்தான்.

அந்த கறுத்த மனிதனின் கரகரத்த குரலிலிருந்து பதில் வந்தது. அது அவனது ஒன்பது வயது மகளின் சல்லிமுட்டிக்காசு.

இப்போது சேர்ட் கொலர் கையை மெதுவாக விட்டபின், திரும்பவும் கேட்டான். 'மகளின் சல்லிமுட்டிக்காசை நீ ஏன் எடுத்தாய்? என்ன குடிக்கப்போறியா?'

"இல்ல மூன்றரை வருடங்களாக அவள் கஸ்ரப்பட்டுச்சேர்த்த காசு . அவளுக்காக பார்பி சின்னம் பொறித்த பாடசாலை பை ஒன்று வாங்க போகிறேன். அது அவளின் நீண்ட நாள் கனவு என்றான்.

நான் நண்பனைப்பார்த்தேன். விறைத்த அவன் கைகள் சோர்ந்திருந்தன. கண்கள் கலங்கியிருந்தன.

- அசோகா



திருமறைக்கலாமன்றம் பிரான்ஸ் நடாத்திய கலைவண்ணம் 2011 நிகழ்வில்

**கலைஞர் அருளானந்தம்**

கௌரவித்துச் சிறப்பிக்கப்பட்டார்.

●



கவிஞர் வி.ரி. இளங்கோவனின் மண்மறவா மனிதர்கள்

**நூல் வெளியீடு**

எதிர்வரும் 11.12.2011 இல் 50, Place de Torcy, 75018 Paris (Métro : Marx Dormoy) எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.



நயினாதீவு அபிவிருத்திக்கழகம் 05.11.2011 ல் தனது இரண்டாவது ஆண்டுவிழாவினை பாரிசில் கொண்டாடியது. விழாவையொட்டி நயினைச்சுடர்-2 என்ற மலரினையும் அவர்கள் வெளியிட்டிருந்தார்கள்.

♦

1948 டிசம்பர் 10இல், ஐக்கிய நாடுகள் அமைப்பினால் "அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்" (Universal Declaration of Human Rights) முதன் முதலில் பிரகடனப்படுத்தப்பட்டது,

♦



# ARRÊT MALADIE

## சுகயீன விடுமுறைக்கொடுப்பனவுகள் : துஸ்பிரயோகத்திற்கு எதிராக பிரெஞ்சு அரசு நடவடிக்கை!

நாட்டிலுள்ள சுகயீன விடுமுறைக்கொடுப்பனவுகள் அரச மற்றும் தனியார் துறையிலுள்ள பணியாளர்களால் பெரிதும் துஸ்பிரயோகப்படுத்தப்படுவதாகவும் அதனை நிறுத்தும் வகையில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இதுநாள் வரைக்கும் தனியார் துறைப் பணியாளர் ஒருவர் சுகயீனவிடுப்பு எடுக்கும் போது விடுமுறையின் மூன்றாவது நாளிலிருந்து இதற்கான நட்டஈட்டினை அரசாங்கம் வழங்கிவந்தது. ஆனால் புதிய நடைமுறையின் பிரகாரம் தனியார் துறையினைச் சேர்ந்த ஒருவர் சுகயீனவிடுப்பு எடுக்கும் போது அவரது விடுப்பின் நான்காவது நாளிலிருந்தே நட்டஈட்டினை அரசாங்கம் வழங்கவுள்ளது. தவிர அரசதுறைப் பணியாளர் ஒருவர் எடுக்கும் சுகயீனவிடுப்புக்கு இதுநாள்வரை முழுமையாக நட்டஈடு வழங்கப்பட்டுவந்தது. ஆனால் இனிவரும் நாட்களில் அரசதுறைப் பணியாளர் எடுக்கும் சுகயீனவிடுப்பின் இரண்டாவது நாளிலிருந்தே நட்டஈடு வழங்கப்படவிருக்கிறது. இந்த நடவடிக்கையின் காரணமாக அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு நிதியில் ஆண்டொன்றுக்கு 200 மில்லியன் யூரோ பணம் மீதமாகும் எனக் கணக்கிடப்படுகிறது.

உடல் நலத்துடன் இருக்கும் பணியாளர்கள் சிலர் தாங்கள் சுகயீனமுற்றிருப்பதாக மருத்துவர்களை நம்பவைத்து பணி விடுப்பினைப் பெறுவதன் ஊடாக சுகயீனவிடுப்பு முறைமையினைத் துஸ்பிரயோகப்படுத்தும் நடவடிக்கைகள் அதிகம் அவதானிக்கப்பட்டதாகவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முடுக்கிவிட்டிருப்பதாகவும் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

இதுவிடயம் தொடர்பாக கருத்துரைத்த பிரெஞ்சு அதிபர் Nicolas Sarkozy, இதுபோல சுகயீனவிடுப்புச் சலுகையினைத் துஸ்பிரயோகப் படுத்துவதன் ஊடாக நாட்டினது சமூகப் பாதுகாப்புப் பணத்தினை திருடுவது அனைத்துப் பிரெஞ்சுக் குடிமகனதும் நம்பிக்கைக்குத் துரோகமிளைப்பதற்கு ஒப்பானதாகும் எனக் கூறுகிறார்.

2010ம் ஆண்டினது புள்ளி விபரத்தின் படி, அரசதுறையினைச் சேர்ந்த பணி யாளர் ஒருவர் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 22.6 நாட்கள் சுகயீன விடுப்பு எடுத்திருக்கிறார். தனியார் துறையினை நோக்குமிடத்து பணியாளர் ஒருவர் 14.5 நாட்களைச் சுகயீன விடுப்பாக எடுத்திருக்கிறார். பிரித்தானியாவினை நோக்குமிடத்து அரச துறையினைச் சேர்ந்தவர்கள் சராசரியாக ஆண்டொன்றுக்கு 8.3 நாட்களையும் தனியார் துறையினைச் சேர்ந்தவர்கள் 5.8 நாட்களையும் சுகயீன விடுப்பாக எடுத்திருக்கிறார்கள்.

(NK)



யேசு கிறிஸ்துவின் பிறப்பினைக் கொண்டாடும் நத்தார் தினத்திற்கான ஏற்பாடுகள் இந்த ஆண்டும் வழமை போலவே முழு வேகம் பெற்றிருக்கின்றன. நத்தார் என்றாலே நத்தார் தாத்தாவும் கிறிஸ்மஸ் மரமும்தான் நினைவுக்கு வரும். கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவரின் வீடுகளிலும் காணப்படும் கிறிஸ்மஸ் மரம் பற்றிய தகவல்கள் சில.

யேசுவின் பிறப்பினைக் கொண்டாடுவதற்காக வீட்டில் மரமொன்றை நட்டுவைத்து அதனை மெழுகுவர்த்தியால் அலங்கரித்து மகிழும் கலாச்சாரம் 15ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியிலேயே உருவானது. முதன்முதலில் மருத்துவர் ஒருவர் தனது வீட்டில் நத்தார் தினத்தில் மரம் ஒன்றை நட்டு அதனை அலங்கரித்தாராம். 1840ஆம் ஆண்டுதான் நத்தார் தினத்தில் கிறிஸ்மஸ் மரத்தினை அலங்கரித்துவைக்கும் கலாச்சாரம் பிரான்சிலும் பரவியது. பிரான்சைப் பொறுத்தவரையில், ஜேர்மனிய எல்லையினை அண்டியுள்ள பிரான்சின் கிழக்குப் புறத்தேயுள்ள அல்சாசி (Alsace) என்ற நகரத்திலுள்ள ஒரு வீட்டில் தானாம் கிறிஸ்மஸ் மரம் முதலில் வைக்கப்பட்டது.

1841ஆம் ஆண்டு பிரித்தானியா இளவரசர் தனது அரண்மனையில் முதன் முதலில் கிறிஸ்மஸ் மரத்தினை அலங்கரித்துவைத்து நத்தாரின் பிறப்பினை நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூறினார். இந்த மரத்தினை நோர்வே பிரித்தானியாவிற்கு அன்பளிப்பாக வழங்கியிருந்ததாம்.

### கிறிஸ்மஸ் - புத்தாண்டு சிறப்பு கொடுப்பனவு

வருமானம் குறைவு, வருமானம் அற்றவர்களாக உள்ள RSA(Revenu de solidarité active), ASS(Allocation de solidarité spécifique) நிதியினை பெற்றுக் கொள்பவர்கள் இந்நிதியினையும் பெறலாம். இரண்டு குழந்தைகள் உள்ளபெற்றோர் 320,14 யூரோவையும், தனி ஒருவர் 150,45 யூரோக்களையும் பெற முடியும். 1998 ம் ஆண்டு முதல் வழங்கப்படும் இச் சிறப்பு கொடுப்பனவு பிரான்சில் 17 லட்சம் பேருக்கு இவ்வருடம் கிடைக்கவுள்ளது.

### 'கிறிஸ்மஸ் மரம்'

கிறிஸ்மஸ் மரத்தில் தொங்க விடப்பட்டிருக்கின்ற அலங்காரங்கள் குறிப்புணர்த்தும் விடயங்கள்

**பச்சை மரம்:** வாழ்வு நிலைபேறானது.

**மரத்தின் உச்சி நட்சத்திரம்:** யேசுபாலனின் பிறப்பினையடுத்து வானில் நட்சத்திரம் தோன்றியதைச் சித்தரிக்கின்றது.

**தேவதைகள்:** நத்தார் தினத்தில் யேசுபாலன் பிறந்துவிட்டார் என்பதை கூறியவர்கள் இந்தத் தேவதைகளே

**இதயம்:** அன்பின் வடிவமாய் இருப்போம்

**கிறிஸ்மஸ் மரத்தில் தொங்கும் பேப்பரில் செய்யப்பட்ட சங்கிலி:** மானிடர்கள் அனைவரும் சகோதரத்துவத்துடனும், ஒற்றுமையுடனும் வாழவேண்டும் எனும் தத்துவம்.

**மரத்தின் அடியில் வைக்கப்படும் பரிசுப்பொதிகள்:** இறைவன் மக்களுக்கு எப்போதும் பரிசுகளை அள்ளித் தந்திடுவார்.

(NK)



# வாகனத்தரிப்பிடக் கட்டணம் : கடனட்டைகளையும் பயன்ஸடுத்தலாம் !

**பா**ரிசிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் சேவையில், கடமையில் ஈடுபடும் போக்குவரவுப் பொலிசார் நவம்பர் மாத இறுதிப்பகுதி முதல் தொடுதிரையுடன் (touch screen) கூடிய புதியதொரு இலத்திரனியல் சாதனத்தைக் கொண்டிருப்பர்.

வாகனச் சாரதியொருவர் தவறிழைக்குமிடத்து அங்கு வரும் போக்குவரவுப் பொலிசார் தாம் புதிதாக வைத்திருக்கும் தொடுதிரையுடன் கூடிய அந்த சாதனத்தில் குறித்த நபருக்கான தண்டம் என்ன என்பதை எழுதினால் போதுமானது. குறித்த சாரதி என்ன தவறிழைத்தார், அதற்கான தண்டப்பணம் எவ்வளவு என்ற விபரங்கள் அந்தச் சாதனத்திலிருந்து தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட அங்கிருந்து அது கடித வடிவில் குற்றமிழைத்தவரின் வீட்டுக்குச் சென்று சேரும். இவை அனைத்தும் தானியங்கியாகவே இடம்பெறும். நீண்ட நாள் பரீட்சார்த்த முயற்சியின் பின்னர் நவம்பர் மாத இறுதி முதல் இந்தப் புதிய திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

வாகனத் தரிப்பிடத்துடன் தொடர்புடைய குற்றங்கள், சிவப்பு விளக்கினைப் பொருட்படுத்தாமல் வாகனத்தினை ஓட்டுதல் மற்றும் வேகமாக வாகனத்தினைச் செலுத்துதல் போன்ற குற்றங்கள் வெகுவாகக் குறைவதற்கு இந்தப் புதிய தொழில்நுட்பம் கைகொடுக்கும் எனப் பொலிசார் நம்புகிறார்கள். பிரான்சில் ஆண்டுதோறும் இடம்பெறும் 26 மில்லியன் போக்குவரத்துசார் குற்றங்களில் அரைப்பங்கிற்கும் அதிகமானவை வாகனத் தரிப்புத் தொடர்பானவையே.

அத்துடன் பாரிஸ் நகர மேயரின் ஏற்பாட்டில் நகரத்திலுள்ள வாகனத் தரிப்பிட கட்டண மானிகளில் கடனட்டைகளையும் (Credit card) பயன்படுத்தக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. 2012ஆம் ஆண்டளவில் பாரிஸ் நகரில் மொத்தமாக இருக்கும் 8,000 வாகனத் தரிப்பிடக் கட்டண மானிகளில் 2000 மானிகள் கடனட்டைகளைப் பயன்படுத்தக்கூடியதாக மாற்றப்பட்டு விடும் எனக் கூறப்படுகிறது.

(NK)


நிலா
www.nilafrance.com
நிலா பற்றிய
உங்கள் அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகளுக்கு
சங்கீதா அச்சகம்
லாச்சப்பல்


## பீட்ரூட் அல்வா



**தேவையான பொருட்கள்.**

பீட்ரூட்-1/2Kg
சர்க்கரை -300g
ஏலக்காய் -6 பொடி செய்தது
முந்திரிப்பருப்பு -250g
நெய் -3 தேக்கரண்டி
பால் -100ml

**செய்முறை :**

பீட்ரூட் தோலை சீவி எடுத்தபின் பீட்ரூட்டை பொடியாக துருவிக் கொள்ளவும். நெய்யை சூடு செய்து அவற்றில் முந்திரிப்பருப்பை சேர்த்து இலேசாக பொன் நிறமாக வரும் வரை வைத்திருந்து ஏலக்காய் பவுடர் மற்றும் பால் சேர்க்கவும். பால் கொதிக்க ஆரம்பிக்கும் போது பீட்ரூட் சேர்த்து அளவான சூட்டில் வைத்து பீட்ரூட் நன்றாக வேகும் வரை நன்றாகக் கிளறிக் கொண்டே இருக்கவும்.

சர்க்கரை சேர்த்து அளவான சூட்டில் வைத்து ஒட்டாமல் வரும்வரை கிளறிக் கொண்டிருக்கவும். சற்று நிமிடம் கழித்து பீட்ரூட் அல்வா பதம் வந்தவுடன் இறக்கி ஆறியதும் பரிமாறிக் கொள்ளவும்.

- SJ

## பிரெஞ்சு ஜனாதிபதிக்கு பெண் குழந்தை

**பி**ரான்சின் முதற்பெண்மணி கர்லா புறுனி - சார்க்கோஸி 19.10.2011ல் பெண்குழந்தை யொன்றிற்குத் தாயானார்.

இக் குழந்தை இத் தம்பதியினருக்கு பிறந்த முதலாவது குழந்தையாகும். இக்குழந்தை சார்க்கோசிக்கு நான்காவது பிள்ளையாகும். அவர் மனைவிக்கு இரண்டாவது குழந்தையாகும். பிரான்சின் 5வது குடியரசுத் தலைவர் ஒருவர் பதவியில் இருக்கும் போது தகப்பனானமை இதுவே முதற் தடவையாகும். இதற்கு முன்னர் 1856ம் ஆண்டில் 3வது நெப்போலியன் அரசுத் தலைவராக இருக்கும் போது குழந்தை கிடைக்கப் பெற்றார். பிரித்தானியாவின் பிரதம மந்திரியாக இருந்த ரொனி - பிளேயர், டேவிட் கமறூன் ஆகியோர் பதவியில் இருந்தபோது குழந்தைகள் கிடைக்கப் பெற்றுள்ளனர். அத்துடன் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியில் இருந்த வேளையில் ஜோன். எப். கென்னடி அவர்களும் ஒரு குழந்தைக்கு தகப்பனாகியுள்ளார்.



(YB)


2012ம் ஆண்டிற்கான கலண்டர்கள்
குறைந்த விலையில்
எம்மிடம் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்
சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle - 75010 Paris (M°: la Chapelle)
Tél. : 01 44 72 08 94

## Champs Elysée பகுதியில்




உலகின் மிக அழகான தெரு (The most beautiful avenue in the world) என அழைக்கப்படும் சாம்ப்ஸ் எலிசே பகுதி பிச்சை எடுப்பவர்களாலும், பொய்யான காரணங்களை காட்டி பணம் கேட்பவர்களாலும் திண்டாடிக்கொண்டிருக்கிறது. தினசரி 100,000 இற்கு மேற்பட்டோர் பயணம் செல்லும் இத்தெருவில் வழிப்பறிகளும் பிச்சைகளும் பெரும் இடைஞ்சலாக இருந்து வருவதாக அரசு கருதுகிறது.

பிரான்சின் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களில் குறிப்பிடத்தக்க இடத்தை ரூமேனியர்கள் வகிப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இன்று பாரிசில் கோர்ட்டிற்கு வரும் 10வீதமானவர்களாகவும் பிரான்ஸ் முழுவதுமுள்ள குற்றவாளிகளில் 2 வீதத்தினர்களாகவும் ரூமேனியர்கள் இருக்கின்றனர்.
இவர்கள் மிக அதிகளவில் வழிப்பறி (Pick pocket), ATM பண மோசடி, முறையற்ற விற்பனை, விபச்சாரம், போலி ஆவணம் கொண்டு பணத்திற்காக கெஞ்சுதல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவதாகவும், போக்குவரத்து வேளையில் பெரும் இடையூறை விளைவிப்பவர் களாகவும் இருக்கின்றனர்.
கணிசமானளவு சிறு வயதினரும் (12-13 வயது) இணைந்து செயற்படும் இவ் ரூமேனியரை மாபியா குழுவினரே இயக்குவதாகவும் அலசப்படுகிறது.
குற்றச் செயல்களால் ஏற்படும் இடையூறை தவிர்க்க தனது முதற்கட்ட திட்டங்களை பொலிசாருடன் இணைந்து அமுல்படுத்த முனைகிறார் உள்துறை அமைச்சர் Claude Guéant. அதில் அவர் நடைமுறைப்படுத்த முயலும் 3 திட்டங்கள்.

**01.** சாம்ப்ஸ் எலிசே பகுதியில் பிச்சை எடுப்பதற்கு தடை விதித்தல். மீறி பிச்சை எடுப்பவர்கள் கைது செய்யப்படல்.


**2.** குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறு வயதினர் கைது செய்யப்பட்டு அவர்களது தாய் தந்தையரிடம் தம் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படல். தாய்தந்தையற்ற சிறுவர்கள் எனில் அவர்கள் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் ஒப்படைக்கப்படல்.

**3.** ரூமேனியர்கள் செய்யும் குற்ற நடவடிக்கைகளிற்கு தீர்வு காண்பதற்கு ரூமேனிய நாட்டுடன் இணைந்து செயற்படல். இதற்காக ரூமேனிய நாட்டு நீதியாளர் ஒருவர் பாரிசில் தங்கியிருத்தல்.

2014 இல் ரூமேனியா ஐரோப்பிய ஒன்றியத்தின் நிரந்தர அங்கத்துவ நாடாக ஆகும் வரையில் ரூமேனியர்களின் குற்றச் செயல்களிற்கு எதிராக முறையான திட்டங்களை மேற்கொள்ள முனைந்து செயற்படுகிறார் பிரான்சின் உள்துறை அமைச்சர்.

இவை இவ்வாறிருக்க, "இது ஒரு சமூகவியல் பிரச்சினை. அகதிகளாக வந்த எங்களால் இதைப் புரிந்து கொள்ளமுடிகிறது. ஐரோப்பாவின் வாசலில் ஓர் ஏழைநாடு கையேந்தி நிற்க, பணக்கார நாடுகள் இவ்வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குவது சகஜம். முடிந்தவரை சகிப்புத்தன்மையுடன் இதை அணுகவேண்டும். அதைவிட, ஒரு நாட்டவர்களையே குறிவைத்து சட்டங்கள் இயற்ற தற்போதைய அரசு முனைகிறது. இது ஜனநாயக விரோதமானது " என்கிறார் தென்கிழக்காசிய சமூகவியலாளர் ஒருவர்.

- மகேன்



**«முடியாது என்று எனக்கு கூறிய ஒவ்வொரு மனிதனிற்கும் நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன். ஏனெனில் அவர்களால் தான் சுயமாக அவற்றை நான் செய்துமுடித்திருக்கின்றேன்»**

**- ஐன்ஸ்ரீன்**



நண்பன் மேல் கோபப்பட்டேன்
கோபத்தைச் சொன்னேன்
கோபம் முடிந்தது

எதிரி மேல் கோபப்பட்டேன்
கோபத்தைச் சொல்லவில்லை
கோபம் வளர்ந்தது.

- வில்லியம் பிளேக்



## நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ.. அதுவாகவே ஆகிறீர்கள்.


நாங்கள் அண்மித்துக் கொண்டிருக்கும் புதுவருட விடுமுறைநாட்களில் வர்த்தகர்களும், பாவனையாளர்களுமே வழிப்பறிகாரர்களுக்கும், கொள்ளையடிப்பவர்களுக்கும் இலக்காக இருக்கக் கூடும் என்கின்ற அடிப்படையில் பொலிஸ் தனது ரோந்து நடவடிக்கையை ஜனவரி நடுப்பகுதி வரை Champs-Elysées, Rue de Rivoli, Place Vendôme, Boulevard Haussmann பகுதிகளில் அதிகப்படுத்தியுள்ளது. பொதுமக்கள் நலன்கருதி மொபைல் பொலிஸ் ஸ்ரேசன் ஒன்றையும் Paris - Opera பகுதியில் அமைத்துள்ளனர். இவற்றைவிட ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ள வீடியோக்கள் மூலம் பொலிசார் தொடர்ந்து கண்காணித்து, பிரச்சினை ஏற்படும் இடத்திற்கு விரைந்து செல்லவுள்ளனர்.


இவற்றைவிட மேலதிக ஆலோசனை, தேவை ஏற்படின் வர்த்தகர்கள் தொடர்புகொள்வதற்கென www.cespplussur.fr இணையத்தளத்தை பயன்படுத்தும்படி பொலிசார் கோரியுள்ளனர்.

## ஒபாமா உலகின் அதிக பலம் பொருந்திய மனிதனாக









அமெரிக்க Forbes சஞ்சிகையானது வருடாந்த கணிப்பீட்டில் இவ்வாண்டிற்கான பலம்வாய்ந்த மனிதராக ஒபாமாவை தெரிவு செய்துள்ளது. சீன ஜனாதிபதி Ju Jintao இனை 2வது இடத்திற்கு பின்தள்ளி ஒபாமா இந்த இடத்தை தனதாக்கியுள்ளார். ரஷ்யாவின் பிரதம மந்திரி Vladimir Poutine 3வது இடத்திலுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தலைவர் Christine Lagarde 39வது இடத்திலுள்ளார்.

## 50வது ஆண்டில் பிரான்ஸ் விண்வெளி மையம்

Charles de Gaulle ஜனாதிபதியாக இருந்தபோது, 19, டிசெம்பர் 1961ம் ஆண்டு கட்டப்பட்ட பிரான்ஸ் விண்வெளி மையத்தின் 50வது வருடத்தையொட்டி புதிய முத்திரை ஒன்றினை 12 ஒக்ரோபரில் வெளியிட்டிருக்கிறார்கள்.



***மௌனம்தான் அனைத்துக் கேள்விகளுக்குமான சிறந்த பதில்.***
***புன்னகைதான் எத்தகைய நிலைமைகளையும் சமாளிப்பதற்கான கருவி.***

## அட வாழைப்பழமா!..



விளையாட்டு வீரர்களின் கடைசி நேர மனநிலையை வெற்றியா தோல்வியா என நிர்ணயிப்பது அதன்படி முழு வேகத்துடன் செயல்படுவது என அனைத்தையும் நிர்ணயிப்பது அவர்களின் உடலில் உள்ள பொட்டாசியம்தான். பொட்டாசியம் அளவு குறையாமல் இருந்தால் நான்காவதாக ஓடி வரும் வீரர் அந்தக் கடைசி நொடியில் முடிவு எடுத்து முதல் ஆளாக ஓடி வந்து வெற்றி பெற்று விடுவாராம். விளையாட்டு வீரர்களுக்கும் தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்று விரும்புவர்களுக்கும் முழுமையான சக்தி நிரப்பப்பட்டுள்ள பழம் வாழைப்பழம்தான் என்கிறார் பிரிட்டிஷ் சத்துணவு நிபுணர் ஜேன்கிரிஃப்பின். பொட்டாசிய குறைபாட்டை தினமும் ஒரே ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வருவதன் மூலம் நீக்கி விட முடியும். இதைவிட காய்ச்சல் வருகிறது போல இருந்தாலும் உடனடியாக ஒரு வாழைப்பழத்தை சாப்பிடுங்கள் என்று சொல்கின்றனர். செய்துதான் பாருங்களேன்..

## தமிழ் எங்கள் உயிருக்கு நிகர்..



*7ம் அறிவு திரைப்படத்தையும் அதன் பல்வேறுபட்ட விமர்சனங்களையும் நீங்கள் பார்த்திருக்கக் கூடும். படம் சார்பாக எப்படிப்பட்டவிமர்சனங்கள் வந்தபோதும் எம்மனங்களில் சில தேடல்களைத் தந்துதான் இருக்கிறது 7ம் அறிவு.*
*நண்பரொருவரின் இணையவழி பகிர்வு இது..*

மொரீசிய நாட்டின் ரூபாய் தாளில் தமிழில் எழுத்துக்களும், எண்களும் இடம் பெற்றிருக்கின்றன. எங்கோ தூரத்தில் ஆபிரிக்காவின் அருகில் உள்ள மொரீசிய அரசு தமிழ் எண்களை பயன்படுத்துவது பெருமைக்குரியதே.மொரீசியசில் 30000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அந்த தமிழ் எழுத்துக்களையும், எண்களையும் படத்தின் மூலம் காணலாம்.


***அடைய முடியாத அன்பினைத் தேடி***
***அடிவானம் நோக்கியோடும் நீயும்,***

***விதியின் சதியில்,***
***தொடுவானம் போலிருந்து***
***தொலைந்து போகும் நானும்,***
***இறைவனின் படைப்பில்***
***மாற்றமுடியாத நியதிகள்.***




பொன்னியின் பக்கம்

# பூமிப்பந்தில் 700 கோடி மக்கள்!




*19ம் நூற்றாண்டில் 100 கோடியாக இருந்த மக்கள் தொகை 1930 இல் 200 கோடியாக அதிகரித்து இவ்வாண்டின் ஒக்ரோபர் மாத முடிவோடு 700கோடியாகின்றது. கடந்த 80 ஆண்டு காலப்பகுதியில் சனத்தொகை 3 மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது. தற்போது ஒவ்வொரு நிமிடமும் 266 குழந்தைகள் பிறக்கின்றன. நாளொன்றிற்கு 3 82 000 குழந்தைகளும் வருடத்திற்கு 14கோடி குழந்தைகளும் பிறக்கின்றன. ஆனால் இறப்புவீதத்தை கணக்கிடுகையில் நிமிடமொன்றிற்கு 158 பேர் இறக்கின்றனர். எனினும் கருத்தடை காரணமாக 2100ம் ஆண்டில் மக்கள் தொகை 100 கோடியாக அதிகரித்து* தொடர்ந்து சமநிலையில் இருக்க வாய்ப்புள்ளதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தெரிவிக்கின்றது. அபரிமிதமான மக்கள் தொகை வளர்ச்சி காரணமாக நீர், உணவு, எரிபொருள் போன்ற பூமிப்பந்தின் வளங்களில் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளன என பல உலக ஸ்தாபனங்கள் எதிர்வுகூறுகின்றன.

(PK)

## பிரான்ஸ்

**65 026 885** - சனத்தொகை(01-01-2011) கடந்த 30 வருடங்களில் பிரான்சின் சனத்தொகை 10 மில்லியனால் அதிகரித் துள்ளது. 1958 இலிருந்து இது வரை 20 மில்லியன் மக்கள் கூடியுள்ளனர்.

**828 000** - குழந்தைகள் (2010இல் பதிவுகளின்படி)

**545 000** - இறந்தவர்கள்(2010இல் பதிவுகளின்படி)

**2,01** - சராசரி குழந்தைகள் வீதம் (35 வருடங்களாக மாறாதுள்ளது) 1945 - 1974 வரை ஒரு பெண்ணிற்கு சராசரியாக 3 குழந்தைகள்)

**84,8** - சராசரி ஆயுட்காலம் (2010இல் பெண்களுடையது)

**78,1** - சராசரி ஆயுட்காலம் (2010இல் ஆண்களுடையது)
1900 இல் சராசரி ஆயுட்காலம் 50 ஆண்டுகளிற்கும் குறைவாக இருந்தது.

**16,8%** - 65 வயதிலும் அதிகமானவர்கள்

## மெற்றோ கிறிமே (Crimeé) இல் «பாபு»வுக்கு அஞ்சலி



தடம் 7வுள்ள மெற்றோ «கிறிமே» இல் «பாபு» என அழைக்கப்படும் ரஜிந்தர் - சிங் (33வயது) என்பவர் சென்ற 29ம் திகதி கொல்லப்பட்டார். இவர் இலங்கையர் என பரவலாகப் பேசப்பட்டிருந்த போதிலும், வட இந்தியாவைச் சேர்ந்தவராவர். 22 வயது நிரம்பிய இளைஞன் ஒருவரால் இளம் பெண் ஒருவர் தாக்கப்பட்ட வேளையில் உதவிக்கு விரைந்து சென்ற போது மின்சாரம் தாக்கி உயிர் இழந்துள்ளார் .

உதவிக்குச் சென்ற வேளை உயிரிழந்தவருக்கு பிரான்சின் போக்குவரத்து அமைச்சரும் RATP அதிகாரிகளும் மலர்வளையம் வைத்து கிறிமே மெற்றோவில் அஞ்சலி செலுத்தியுள்ளனர். இத் தாக்குதலில் ஈடுபட்ட 22 வயது மிக்க இளைஞன் கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் உடல் அவரின் சொந்த ஊருக்கு கொண்டு செல்வதற்காக 5000 யூரோக்கள், நண்பர்கள் நலன்விரும்பிகளிடம் சேர்க்கப்பட்டது.

(YB)

## நண்பன்



*«சாப்பிட்டேன்» என*
*அம்மாவிடமும்*
*«கவலைப்பட வில்லை» என*
*அப்பாவிடமும்*
*«அடுத்த மாதத்திற்குள்*
*வேலை வாங்கிடுவேன் » என*
*அண்ணனிடமும்*
*«முதல் மாதச் சம்பளத்தில்*
*உனக்கொரு மூக்கணினி» என*
*தங்கையிடமும் சொல்ல முடிந்தது...*
*«காலையிலிருந்து சாப்பிடல..*
*ரொம்ப பசிக்குதுடா,*
*ஏதாவது வாங்கிக்கொடு»*
*என நண்பனிடம்*
*மட்டும் தான் கேட்க முடிந்தது..*

*- செந்தில்குமார்*

படித்தது - சுவைத்தது
விஜயரூபன்



*உலகில் அதிகளவான முதியோர்கள் வசிக்கும் நாடாக ஜப்பான் உள்ளது. இங்கு 65 வயதிலும் கூடியவர்கள் 23 வீதம் பேருள்ளனர். இதற்கடுத்ததாக ஐரோப்பாவில் ஜேர்மனியும் இத்தாலியும் உள்ளன.*



*அதிகளவில் ஆபிரிக்காவில் ஒரு பெண்ணிற்குசராசரியாக 7 குழந்தைகள் உள்ளனர். மிகக் குறைந்தளவில் தாய்வானில் குழந்தை வீதம் 0,9ஆகும். உலகில் சராசரியான குழந்தை வீதம் 2,5 ஆகும்.*



*2011ம் ஆண்டில் ஆயுட்காலம் குறைந்த நாடாக அங்கோலா வுள்ளது. CIA இன் கணிப்பின் படி 38.76 ஆண்டுகளாகும். ஆயுட்காலம் கூடிய நாடாக மொனாக்கோ (சராசரி ஆயுட்காலம் 89,73) உள்ளது.*

## நவம்பர் மாதத்து வரலாற்று நிகழ்வுகள்

இப்போது நடைமுறையில் இருக்கும் ஜூலியன் காலண்டர் படி, ஆண்டொன்றில் பன்னிரண்டு மாதங்கள் உள்ளன. இக்காலண்டர் முறை நடைமுறைக்கு வர முன்னர் இருந்த காலண்டர் முறையில் பத்து மாதங்கள் இருந்தன. பின்னர் ஜுலையும் ஓகஸ்டும் இடையில் சேர்க்கப்பட்டதால் ஏலவே ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது மாதங்களாக இருந்த, செப்ரெம்பர் - Sept - ember (bre) - ( sept - சப்த), ஒக்ரோபர் - Oct - obre(bre) - (oct - அட்ட), நவம்பர் - Nov - ember (bre) - ( nov - நவ), டிசம்பர் - Dec - ember (bre) - ( dec - தசம்) முறையே, ஒன்பதாவது, பத்தாவது, பதினோராவது, பன்னிரண்டாவது மாதங்களாகத் தள்ளப்பட்டுவிட்டன.

*1. **நவம்பர் 1 :*** கத்தோலிக்க மதப்படி, இறந்தவர்களை நினைவு கூரும் புனித தினம். இது **புனித ஆத்மாக்கள் தினம்** - La Toussaint - All Saints Day என கொள்ளப்படுகிறது.




***2. நவம்பர் 11 :*** இது முதலாம் உலகப் போரில், பிரான்ஸ் மீது ஜேர்மனி படையெடுத்தது. யுத்தம் நடைபெற்ற போது, பிரெஞ்சியப் படைகள் ஜேர்மனியப் படைகளை நாலாபுறமும் புறமுதுகிட்டோடும் வண்ணம் போர் புரிந்தனர். ஜேர்மனி போர் நிறுத்தத்திற்கு முன் வந்தது.

போர் நிறுத்த ஒப்பந்தம் - L'Armistice 1918 ஆம் ஆண்டு, 11 ஆம் மாதம், 11 ந் தேதி, 11 மணிக்கு கைச்சாத்து இடப்பட்டது.

***3. நவம்பர் 14 :*** வலி காட்டாமல் மெல்ல மெல்ல உடல்நலத்தைச் சீரழிக்கும் நீரிழிவு நோயினால் உலகில் பல்லாயிரக்கணக்காக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக சுகாதார நிறுவனமான WHO - World Health Organisation தற்போது 340 மில்லியன் மக்கள் நீரிழிவினால் சீரழிக்கப்பட்டுள்ளனர் என அபாயத் தகவல் தருகிறது. இந்நோயை விரைவில் கட்டுப்படுத்துவதற்கு ஆவன செய்யாவிடில் இந்த எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டளவில் இரட்டிப்பாகி விடும் என அபாயச்சங்கு ஊதுகிறது.

# தேன்கூடு

பேராசிரியர் ச. சச்சிதானந்தம்

## பதிவுகள்




உடலில் கணையம் இன்சுலின் எனும் ஓமோன் சுரக்காது விட்டாலோ அல்லது சுரக்கப்படும் இன்சுலின் உடலில் பாவிக்க முடியாதவாறு இருந்தாலோ இரத்தத்தில் சீனி (சர்க்கரை) யின் அளவு அதிகரிப்பதன் விளைவாக நீரிழிவு நோய் உண்டாகிறது.

எனவே இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவே இன்சுலின் தேவை. இந்த மருந்தான இன்சுலினை செயற்கையாக 1922 ஆம் ஆண்டு மருத்துவரும் விஞ்ஞானியுமான கனடியர் Frederick Grant Banting என்பவர் Charles Best என்ற மாணவருடன் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தார். இவரின் புண்ணியத்தினால் இந்நோய் இப்போது உலகில் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. இல்லாவிடில் உலகத்தில் உள்ள எத்தனையோ பேர் சொல்லாமல் கொள்ளாமல் ஒரு அசமார்த்தமும் இல்லாமல் வேளைக்கே ஓடிப்போயிருந்திருப்பார்கள். இந்த மருத்துவர் பிறந்த நாளான 14. 11. (1891) **உலக நீரிழிவு தினமாகக் கொள்ளப்படுகிறது.**

*4. நவம்பர் 25 :* இந்த பூமியில் அன்று தொட்டு இன்று வரையும் ஆண்களால் பலவிதமான கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு உடல் ரீதியிலும் உள ரீதியிலும் பாதிக்கப்படுபவர்கள் ஆகாயத்தில் அரைவாசியான பெண்கள். பெண்களுக்கு எதிராக வன்புணர்ச்சி, வாழ்க்கைத் துணைவனின் கொடுமை, கல்வி கற்கும் இடத்தில் துஷ்பிரயோகம், வேலைசெய்யும் இடங்களில் பாலியல் துன்புறுத்தல், கலாச்சாரத்தின் பெயரால் இன உறுப்பு சிதைப்பு, வதை போன்ற வன்செயல்களால் பெண்ணினம் கண்ணீர் விட்டு வருகிறது.

பிரான்சில் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் 663, 000 பெண்கள் வன்செயல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் 2, 5 மில்லியன் பெண்ணினத்தவர்கள் வன்செயல்களுக்கு உள்ளாகின்றார்கள். ஆனால் இத்தொகையினரில் 60, 000 பேர் தான் பொலிசில் முறைப்பாடு கொடுக்கின்றார்கள் என

Fédération Nationale SOLIDARITÉ Femmes


## அண்ணாமலை பல்கலைக் கழகம்

**பரதநாட்டிய இசைத்துறை பட்டப்படிப்புக்கள்**

- B.A. Dance / Music — இளங்கலை : பரதநாட்டியம் / சங்கீதம்
- M.A. Dance / Music — முதுகலை : பரதநாட்டியம் / சங்கீதம்
- Diploma . Dance / Music — பட்டயம் : பரதநாட்டியம் / சங்கீதம்
- Certificate . Dance / Music — சான்றிதழ் : பரதநாட்டியம் / சங்கீதம்
- நாட்டியக்கலைமணி : பரதநாட்டியம்
- இசைக்கலைமணி , இசைச்செல்வமணி : சங்கீதம் / வயலின் / வீணை
- தேவார இசைக்கலைமணி
- Teachers Training Certificate in Indian Music


2012 கல்வி ஆண்டுக்கான பதிவுகள் நடைபெறுகின்றன.
முதல் வருடத் தேர்வு ஜுலை 2012.
இந்திய பரதநாட்டிய / இசைப் பேராசிரியர்கள்

**Sachchi Education ( Annamalai University)**

70, rue Philippe Girard - 75018 Paris **Tél. : 01 46 07 16 00 / 01 60 28 39 12**

Fédération nationale solidarité de femmes தெரிவிக்கிறது. இவ்வாறு இந்தப் பூமியில் உள்ள அத்தனை நாடுகளிலும் பெண்கள் வெவ்வேறு வடிவங்களில் கொடுமைக்கு ஆளாகின்றார்கள். உலகின் நான்கு மூலைகளிலிருந்தும் கூக்குரல், அபயக்குரல் எழுப்புகிறார்கள். ஆயினும் அந்த கிருஷ்ணன் கூட வருவதில்லை. அதனால் தான் பெண்களுக்கு எதிரான வன்செயல்களை ஒழிக்க உதவுமாறு ஐ.நாவின் அனுசரணையுடன் நவம்பர் 25 இலிருந்து டிசம்பர் 10 வரை பெண்களுக்காக பல நாடுகளில் பகிரங்கமாகக் கூட்டம் கூட்டுகிறது.

## பிரான்சின் மூதாதையர் கோலுவாவினர் கண்காட்சி
## Expo - Gaulois renversante




இந்நாட்டில் பலஆண்டுகளாக வாழ்ந்துவரும் வெளிநாட்டவர்களுக்கு எதிராகக் காலத்திற்குக் காலம் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. தேர்தல்களில் வாக்குகள் பெறுவதற்காக வெளிநாட்டவர் களுக்குப் பாதகமாக கருத்துக்களை வெளியிடுவது வழக்கம். இவ்வாறு அரசியல் நடத்தும் இத்திருநாட்டின் பெயரோ அல்லது இந்நாட்டு இனிய மொழியோ இந்த மண்ணுக்கு உரியது அல்ல. பிரான்ஸ் என்பது ஜெர்மனிய இனத்தவர்களில் ஓர் பிரிவினரான Franc சமூகத்தவரின் நாடு என்பதுதான் France. ஜூலியஸ் சீசரின் மொழியான இலத்தீனில் இருந்து பிறந்த மொழி தான் Le français. தற்போது இந்நாட்டுத் தலைவரான Nicolas Sarkozy இன் தாய் - தந்தையர் பிரான்ஸ் அல்லாத வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.


பிரான்ஸ் என இந்நாளில் அழைக்கப்படும் நாட்டின் பூர்வீகர் பெயர் கோல் - Gaule ( Gallia). கோலில் பேசப்பட்ட மொழி கோலுவா- Gaulois( Gallus). இந்நாட்டின் மூதாதையர்கள் கோலுவா - Gaulois குழும மக்கள். அதனால் தான் பிரெஞ்சு வரலாற்றுப் புத்தகங்களில் 'Nos ancêtres sont Gaulois' (எங்கள் மூதாதையர் கோலுவா) என ஓர் அத்தியாயம் உள்ளது

Gallus என்றால் Coq - சேவல் என்று அர்த்தம். கோலுவாவினருக்கு பிரியமானது சேவல். சேவல் என்பது வீரம், பலம் என்பவற்றைக் குறிக்கும். அதன் காரணமாகத்தான் பிரான்சின் விளையாட்டுச்சின்னம் சேவல். தேவாலயங்களின் மணிக்கூட்டுக் கோபுரத்தின் உச்சியில் இருப்பதும் சேவல். Gaule என்பதன் அடிப்படையில் தான் பிரான்சின் முதல் ஜனாதிபதியின் பெயர் Charles de Gaule. இவரைக் கௌரவம் செய்வதற்காக இடப்பட்டவை தான் Charles de Gaule (CDG) விமான நிலையமும், Charles de Gaule ( Etoile) ஒரு மெத்ரோ நிலையமும். Charles எனும் பெயரில் பல அரச வம்சத்தினர் ஐரோப்பாவில் இருந்தனர். Charles de Gaule என்றால் கோலின் சார்ள்(ஸ்). Charlemagne ன் ஐரோப்பா, பிரான்ஸ், ஜேர்மனி என பிரிந்த போது பிரான்சின் முதல் அரசன் பெயர் Charles Le Chauve.

கோலை 52 ஆம் ஆண்டு ஜூலியஸ் சீசர் கைப்பற்றும் வரை இந்த மண்ணின் மைந்தர்கள் கோலுவா குழும மக்களே. இவர்களும் தமிழர்களைப் போல் ஒற்றுமை இல்லாதவர்களாதலால் ரோமானியர் படையெடுத்த போது தோல்வி அடைந்தனர். இந்த மக்களும் பெரிய மீசை உடையவர்களே. இம்மக்களின் தலைவர் Vercingétorix கைது செய்யப்பட்டு சீசரினால் கை - கால் வெட்டப்பட்டார். ஐரோப்பியரில் முழுக்காற்சட்டையை (Pantalon) முதல் அறிமுகம் செய்து அணிந்தவர்கள் கோலுவாவினரே.

பிரெஞ்சு மொழியில் இன்றும் உள்ள கோலுவா மொழிச்சொற்களில் சில: ambassade - தூதுவராலாயம், ardoise - சிலேற், bagnole - சிற்றுந்து, balai - துடைப்பக்கட்டை, béret - பிரெஞ்சுத்தொப்பி,

blé - கோதுமை, char - தேர், chemise - சேர்ட், goblet - குவளை, mouton - ஆடு...




Expo - Gaulois renversante எனும் கண்காட்சி Cité des Sciences et de l'Industrie இல் இடம்பெறுகிறது. பிரான்ஸ் வரலாறு கூறும் இக்கண்காட்சி 19. 10. 2011 இலிருந்து 02. 09. 2012 வரை நடைபெறும்.

**Expo - Gaulois renversante**
Cité des Sciences et de l'Industrie
30, avenue Corentin Cariou.

## டிசம்பரில் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கிறது!

2011 டிசம்பரில் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கிறது. வாழ்க்கைச்செலவு - பொருட்களின் விலை இந்த மாதம் 0.2 வீதத்தால் அதிகரித்ததாலும், இந்த ஆண்டு 2.3 வீதம் அதிகரிக்கிறது. SMIC எனப்படும் அடிப்படைச் சம்பளம் மணித்தியாலத்திற்கு 9. யூரோவிலிருந்து 9.19 யூரோவாக அதிகரிக்கப்பட இருக்கிறது. இது மாதத்திற்கு - அடிப்படைச்சம்பளம் 1393.82 யூரோ/ மாதம்.

நிலா

நிலாவினைப் பெற்றுக்கொள்ள

**சங்கீதா அச்சகம்**
39, Bld de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

**CHANGE MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**VANNI BOUCHERIE**
26, Rue Perdonnet - 75010 PARIS

**Sachi Education**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS Coiffure**
5B, Ave Alexis Varagne - 95400 Villiers le Bel

**Sarl Varnisha Coiffure**
11, rue de l'Ouest - 75014 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**SHAMROCK EDUCATION CENTRE**
M°: St. François Xavier (13)

**ஜீவனா சலூான்**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**SHAAE Cash & Curry**
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris

நிலாவில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட விளம்பரங்களே வெளியாகும். தொடர்புகளுக்கு

**சங்கீதா அச்சகம்**
01 44 72 08 94

# சமவிலையில்!

# NAVIGO

**பாரிஸின் புறநகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு அதிர்ஷ்டம்!**



பாரிசிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பிரயாணத்திற்கு மக்கள் அரசின் போக்குவரத்து வண்டிகளான பஸ், மெற்றோ, புகையிரதம் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். மாதாந்த போக்குவரத்து செலவுகள் சீராக இருக்கும் பொருட்டு பாரிஸ் உட்பட சுற்றுப்புறங்கள் ஒன்றில் இருந்து ஆறு, வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு மாதாந்த போக்குவரத்து செலவு வட்டாரம் 1-2, 1-3, 1-4, 1-5, 1-6, 3-4, 3-5, 3-6, என பல்வேறு விலைகளில் மாதாந்தக் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. இதை எல்லா வட்டாரங்களிற்கும் செல்லத்தக்கதான ஒரே விலையில் மாதாந்த கட்டணத்தை நிர்ணயிக்க அரச போக்குவரத்து நிறுவனங்கள் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளன.

பாரிசிற்கும் அதன் சுற்றுப்புறங்களிற்கும் செல்வதற்கு ஒரே மாதாந்த விலையை நிர்ணயிக்க முற்படும் போது பாரிஸ் 1ம், 2ம் வட்டாரங்களில் வசிப்பவர்கட்கு விலையைக் கூட்டவும் மற்றையவற்றின் விலையைக் குறைக்கவும் ஆலோசிக்கப்படுகின்றது. இதற்கு பாரிஸ் மக்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர்

அத்தோடு சோசலிசக் கட்சியைச் சேர்ந்த பாரிஸ் நகரபிதா பேர்தரண்ட டெலாநுவா (Bertrand Delanoë) தான் இந்த ஆலோசனைக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலையில் இல்லை என்று தெரிவித்துள்ளார். 1ம்-2ம் வட்டாரங்களிற்கு தற்போது மாதாந்தக் கட்டணம் 62 யூரோக்களாக உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் பாரிசில் உள்ளவர்கள் 10 யூரோக்கள் கூடுதலாக செலுத்த வேண்டி வரும்.

அத்துடன் பொருளாதார சுமையை மக்கள் எதிர் நோக்கி இருக்கின்ற வேளையில் மாதாந்த போக்குவரத்துச் செலவை 10 யூரோக்களினால் உயர்த்துவது மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறை இல்லை என்றும் பாரிஸ் நகரபிதா தெரிவித்துள்ளார்.

ஆனால் பாரிசின் புறநகர்ப் பகுதிகளில் இருப்பவர்கட்கு சமமான விலை வரப்பிரசாதமாகவே அமையும்.

(YB)



# 2013ல் புதிய சாரதி அனுமதிப்பத்திரம்

**சா**ரதி அனுமதிப்பத்திரம் மேலும் மெருகூட்டப்பட்டு புதியவடிவில் 2013 ஜனவரியில் நடைமுறைக்கு வருகிறது. 112 வருடங்களின் பின்னர் பிரான்சில் சாரதி அனுமதிப்பத்திரம் மீள்உருமாற்றம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. சிப்(puce) உள்ளடங்கிய வங்கி அட்டை அளவில் இருக்கும் இவ் அனுமதிப் பத்திரம், உரிமையாளரின் கைவிரல் அடையாளத்தினையும் கொண்டிருக்கும்.

இச் சாரதி அனுமதி அட்டை உரிமையாளரின் கடந்த கால விபரங்களை மட்டுமன்றி, அனுமதிப்பத்திரத்தின் புள்ளிகள், அவர் செய்த குற்றங்கள், குற்றப்பணம் செலுத்தப்பட்டு விட்டதா, இல்லையா எனும் தகவல் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் செய்த வீதி ஒழுங்குமீறல்கள் என அனைத்து தகவல்களையும் உள்ளடக்கியிருக்கும். அத்துடன் குற்றப்பணத்தினையும் இணையம் மூலம் செலுத்த முடியும். இச் சாரதி அனுமதி அட்டை 15 வருடத்திற்கு ஒரு தடவை புதுப்பித்தல் வேண்டும். அதற்கு சிறிய கட்டணம் மட்டும் அறவிடப்படும் அக் கட்டணம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. தற்போது உள்ள சாரதி அனுமதி பத்திரத்திற்கு காலவரையறை கிடையாது. இதுவே புதிய சாரதி அனுமதி அட்டையின் முக்கிய மாற்றமாக கருதப்படுகிறது

பழைய சாரதி அனுமதி பத்திரம் வைத்திருப்பவர்கள் 19 ஜனவரி 2013 தொடக்கம் 2033 ற்கு முதல் அதனை புதுப்பித்தல் வேண்டும். தற்பொழுது 42 மில்லியன் சாரதி அனுமதி பத்திரம் வைத்திருப்பவர்கள் உள்ளனர். இதுதவிர, 3 மில்லியோன் போலிச்சாரதி அனுமதி பத்திரம் நடைமுறையில் உள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

(NR)




லாச்சப்பலில்


## சங்கீதா அச்சகம்

**இலங்கை, இந்திய விலைகளில் அழைப்பிதழ்கள் !**

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் நாடுங்கள்!

Tél./Fax : 01 44 72 08 94

E-mail: sangeethafrance@yahoo.com




39 Bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE